# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.5

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 121/2015**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சிங்கமுத்து | **S/o.** | ராமு |
| **Village** | சித்தலூர் | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.5 |
| **Date** | 12-10-2022 | **Age** | 58/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 12.10.2022.**

**முதல் விசாரணை:**

நான் மேலேக் கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு சொந்த ஊர் சித்தலூர் கிராமம். நான் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் முத்துராமு. எனக்கு லதா, தீபா, வாச்சாரக்காளை, முருகேஸ்வரன் ஆகிய மக்கள் உள்ளார்கள். ரூபா என்ற மகள் இறந்துவிட்டார். எதிரி மகாதேவனுக்கும் எங்களுக்கும் இடத்து பிரச்சினை இருந்து வந்தது. எனது மாமியார் மீனாட்சியை 2வது எதிரி பஞ்சவர்ணம் அடித்துவிட்டார். கடந்த 31.07.2002 அன்று வாச்சாரக்காளை, முத்துராமு, தீபா, முருகேஸ்வரன் ஆகியோர் சித்தலூருக்கு எனது மகள் ரூபா நினைவு நாளுக்கு சாமி கும்பிட காலை 11.00 மணிக்கு சுமோ காரில் சென்றார்கள். அவர்கள் முன்னால் சென்று விட்டார்கள். நான் சாமான்கள் வாங்கிவிட்டு பின்னால் செல்வதற்காக இருந்துவிட்டேன். எனக்கு 11.30 மணியளவில் ஊரிலிருந்து போன் வந்தது. முருகேஸ்வரன் போனில் அம்மா முத்துராமுவை வேல் கம்பால்

குத்திவிட்டார்கள் என்றும், வாச்சாராக்காளையை குத்திவிட்டார்கள் என்றும், தன்னையும் குத்திவிட்டதாகவும் கூறினார். யார் யார் குத்தினார்கள் என நான் கேட்டேன். மகாதேவன் வேல் கம்பால் முத்துராமுவை குத்தினார் என்றும், தடுக்கப் போன வாச்சாரக்காளையையும் ராஜ்குமார் கத்தியால் குத்தியதாகவும், தடுக்கப் போன தன்னை ராஜ்குமார் கத்தியால் குத்தியதாகவும், வாச்சாரக்காளையை செல்லதுரை கம்பியால் அடித்தார் என்றும், முருகேஸ்வரன் கூறினார். சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு காலை 11.45 - 12.00 மணிக்குள் நான் சென்றேன். அங்கு முத்துராமு இறந்துவிட்டதாக கூறினார்கள். வாச்சாரக்காளைக்கு காயங்கள் அதிகமாக இருந்ததால் சிகிச்சைக்காக மதுரைக்கு அழைத்து சென்று விட்டார்கள். முருகேஸ்வரனுக்கு சிகிச்சை எடுத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றுவிட்டார். பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனையில் நானும் லதா, தீபாவும் இருந்துவிட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

பாரதி நகர் என்பது சிவகங்கை நகரில் உள்ளது. சித்தலூருக்கு சம்பவ தினத்தன்று என் மனைவி முத்துராமு, மகன் முருகேஸ்வரன், வாச்சாரக்காளை, தீபா ஆகியோர் பாரதி நகரிலிருந்து தான் சென்றார்கள். பாரதி நகர் என்பது சித்தலூரிலிருந்து 12 கி.மீ இருக்கும். நாங்கள் 20 வருடத்திற்கு மேலாக பாரதி நகரில் குடியிருந்து வருகிறோம். 2ம் எதிரியின் உடன் பிறந்த சகோதரர் தான் என் மகள் லதாவை திருமணம் செய்துள்ளார். மகாதேவன் குடியிருக்கும் வீடு பஞ்சவர்ணத்தின் வீடா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த வீட்டின் முகப்பையும் ஓடுகளையும் உடைத்துவிட்டதாக தான் இந்த சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக என் மகள் லதா, மருமகன் முத்துக்கருப்பன் மற்றும்

சித்தலூரைச் சேர்ந்த பாண்டி மகன் சதீஷ் ஆகியோர் மீது சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் வழக்கு போட்டார்கள் என்றால் சரியல்ல. 21.05.2011ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண்.109/2011 என் மகள் லதா மீதும் மருமகன் முத்துக்கருப்பன் மீதும் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 3வது எதிரி ராஜ்குமாரை அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும் அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. சித்தலூரில் நிறைய வீதிகளும் நிறைய வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். சித்தலூரில் எந்த வீதியில் எந்த கதவிலக்கத்தில் எங்களுக்கு வீடு உள்ளது என்று காட்டக்கூடிய ஆவணம் எதையும் காவல் துறையில் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல எனக்கு எந்த ஊரில் எந்த சர்வே நம்பரில் விவசாய நிலம் உள்ளது என்ற விபரத்தை இதுவரை நான் யாரிடமும் சொல்லவில்லை. எனது மகள் ரூபா என்பவர் எந்த தேதியில் பிறந்தார் என்றும் எப்போது இறந்தார் என்றும் காட்டக்கூடிய ஆவணம் எதுவும் கிடையாது. என் மகள் ரூபாவின் மரணம் சம்பந்தமாக சாமி கும்பிடுவது எங்கள் குடும்பத்தை தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் ஊருக்கே தெரியும். 31.07.2012ம் தேதி ரூபா விஷேசம் சம்பந்தமாக எங்கள் உறவினர்களுக்கு தகவல் சொல்லியிருந்தேன். சாமி கும்பிடுவதற்கு ஏற்பாடு செய்வதற்காக முதல் நாளே போய் வீட்டை எல்லாம் சுத்தம் செய்வோம் என்றால் நாங்கள் எப்போது வேண்டுமானலும் போவோம். அன்று நான் சாமி கும்பிட அந்த ஊருக்கு செல்லவில்லை. ஆனால் நான் பின்னால் சாமான்கள் வாங்கிவிட்டு போகலாம் என்று இருந்தேன். எனக்கு முன்பாக சென்றவர்கள் சாமி கும்பிடுவதற்காக தேங்காய், பழம், பூ, மாலை ஆகியவற்றை கொண்டு சென்றார்கள். அந்த தேங்காய், பூ, மாலை ஆகியவை என்னாயிற்று என்று எனக்கு தெரியாது. என் மருமகன் முத்துக்கருப்பன் மீதும் மகள் லதாவின் மீது போடப்பட்ட வழக்கை திரும்ப பெற

வேண்டி 1, 2 எதிரிகளை தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தோம் என்றால் சரியல்ல. முத்துக்கருப்பனுக்கு தனது பூர்வீக வீட்டை வாங்கித் தரும்படி சொல்லி எதிரிகள் தர மறுத்துவிட்டதால் இரண்டு குடும்பத்திற்கும் விரோதம் என்றால் சரியல்ல. 2ம் எதிரி பஞ்சவர்ணத்தின் மூத்த சகோதரியின் மகள் நித்யாவை எங்கள் உறவினருக்கு பெண் கேட்டு அவர்கள் மறுத்துவிட்டு 5ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டதால் விரோதம் கூடியது என்றால் சரியல்ல. அந்த இரண்டு காரணங்களுக்காக தான் என்னுடைய மகள் லதா, மருமகன் முத்துக்கருப்பன், சித்தலூரைச் சேர்ந்த பாண்டி மகன் ஐயப்பன் மற்றும் சதீஷ் ஆகியோர் 21.05.2011ம் தேதி 1, 2 எதிரிகள் வீட்டை அடித்து நொறுக்கி ஆஜர் 3ம் எதிரிக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அந்த பாண்டியின் மகன் சதீஷ் தற்போது இறந்துவிட்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் வீடு புறம்போக்கில் உள்ளதால் அவர்களை காலி செய்து விட்டு என் மருமகன் முத்துக்கருப்பனை அங்கு குடியிருக்க செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் தகராறு செய்வதற்காக 31.07.2012ம் தேதி என் மகன் வாச்சாரக்காளை மற்றும் முருகேஸ்வரன் மற்றும் என் மகள், மனைவி ஆகியோர்களுடன் சம்பவயிடத்திற்கு சென்றார்கள் என்றால் சரியல்ல. நான் மேற்சொன்ன 31.07.2012ம் தேதி சம்பவங்கள் அனைத்து பற்றியும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் போய் கேள்விப்பட்டது தான் என்று சொன்னால் சரிதான். அங்கு முருகேஸ்வரனை பார்த்து தெரிந்து கொண்டேன். 11.30 மணிக்கு என் மகன் எனக்கு போனில் பேசிய விபரத்தை காவல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்குள் என் மகன் வந்துவிட்டார். நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் கேள்விப்பட்ட சாட்சி என்பதால் என் சாட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும்

பாதை சம்பந்தமாக பிரச்சினை இருப்பதாக நான் சொன்னதில் அது குறித்து எந்த உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரவில்லை. நான் சொல்வது போல் சொத்து எதுவும் கிடையாது என்றாலும் நடைபாதை பிரச்சினை ஏதும் இல்லை என்றாலும் எதிரிகளை தாக்குவதற்காக சென்ற என் குடும்பத்தார்கள் காயப்பட்ட பிறகு அந்த காயத்திற்காக எதிரிகள் மீது புனையப்பட்ட வழக்கு இது என்றால் சரியல்ல.

**ஒப்பம் ஆர்.சத்யதாரா, 12.10.2022**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**சிவகங்கை.**

**//உண்மை நகல்//**